## 11 உக்கிர பாண்டியன் திருஅவதாரப் படலம்

மலையத்துவஜனுக்கு பிறைசூடிய பெருமான் மருமகனாய் வந்து நாட்டில் நல்லாட்சி நடத்தும் சமயம் தடாதகைப் பிராட்டியின் விருப்பத்திற்கு இணைங்கி, தன் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய முருகப்பெருமானையே தடாதகையின் கருவில் உதிக்கச் செய்தார். தங்கச் சிலையையொத்த குமரனை ஈன்ற பிராட்டியார் அகமகிழ்ந்தாள். தேவர்கள், முனிவர்கள், நாட்டின் மக்கள் யாவரும் குழந்தையின் அழகைத் கண்டு வியந்து மகிழ்ந்துக் கொண்டாடினர். நாடு விழாக் கோலம் பூண்டது.

இந்திரன், வருணன், மலையரசன் முதலியோர் அச்சம் கொள்ளும் ஆற்றல் படைத்ததின் காரணத்தினால் குழந்தைக்கு உக்கிரவர்மன் என்று சுந்தரபாண்டியன் பெயர் சூட்டினார். ஐந்துவயதிலேயே பூணூல் விழாவையையும் முடித்தார். வியாழ பகவானை குருவாக்கி சகலகலைகளையும் பயிற்றுவித்தார். பெற்றோரும் மற்றோரும் மகிழ எட்டு வயதிலேயே யாவையும்கற்றுணர்ந்த பண்டிதரானான் உக்கிரவர்மன் பதினாறாம் வயதிலேயே முப்பத்திரண்டுலக்ஷிணங்களும் பொருந்திய குமரனாக திகழ்ந்தான்.

இத்தருணத்தில் அவன் நல்லாட்சி செய்வான் என்று உணர்ந்த சுந்தரபாண்டியன், உக்கிரவர்மனுக்கு முடிசூட்டுவதற்கு முன், திருமணம் செய்ய எண்ணி, மந்திரி சுமதியுடன் ஆலோசனை செய்தார்.

**பல்லவி**

குலம் விளங்க உன்னைத் தடாதகை வேண்ட
குமரனே திருஉருவில் கருவாய் இலங்கச் செய்தாய்

**அனுபல்லவி**

நலம் மிகுந்த பாலன் உக்ரவர்மனுக்கு
நற்கலைகள் பயில வியாழனை அமைத்தீர்

**சரணம்**

முப்பத்திரண்டு லக்ஷணம் கொண்டு
மூவுலகம் போற்றும் சிறப்புடன் விளங்க
முப்புரிநூல் அவனுக்கு முறைப்படி செய்து
முடிசூடும் முன்னே திருமணம் செய்ய எண்ணிணீர்